OS No.93/2018 நாள்: 10.12.2019

வா.சா.1 ___ பெரியதம்பி, குறுக்கு விசாரணை

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்கிறேன் என்றால் நான் தர்மகர்த்தாவாக இருப்பதற்காக தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கிலும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொன்னதை வைத்துதான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பழைய எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். காளியம்மாள் மற்றும் திரௌபதியம்மன் கோயில் ஆதியில் ஆரிமுத்து நைனார் கட்டினார் என்றால் சரிதான். அவருக்கு பின்னிட்டு ராமசாமி நைனார் தர்மகர்த்தாவாக இருந்து வந்தார் என்றால் சரிதான். என்னுடைய இயற்கை தந்தை தங்கவேல் நைனார் என்கிற ஆரிமுத்து நைனார் என்றால் சரிதான். என்னுடைய பெரியப்பா குப்புசாமி நைனாருக்கு குழந்தைகள் இல்லாததால் என்னை தத்தெடுத்து கொண்டார் என்றால் சரிதான். சுமார் 40 ஆண்டுகாலமாக நான் குப்புசாமி நைனாரின் சுவீகார புத்திரனாக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். தற்பொழுது எனக்கு குபபுசாமிக்கு வந்த பாகசொத்துக்களைதான் எனக்கு பாகமாக கொடுத்தர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரமாண பத்திரத்திலும் குப்புசாமியைத்தான் என்னுடைய தந்தையாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். குப்பசாமி நைனார் எந்த ஆண்டில் இறந்தார் என்றால் நான் சிறியவனாக இருந்போது இறந்தார். என்னுடைய பிரமாண பத்திரத்திலும் வழக்கிலும் குப்புசாமி 25 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு பார்த்தால் குப்புசாமி நைனார் இறந்தபோது எனக்கு 37 வயது என்றும், நான் சிறியவனாக இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அனைத்து விவரங்களையும் கூறிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், தற்பொழுது சிறியவானாக இருந்தபொழுது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கை

தாக்கல் செய்தபோது நான் வழக்கு பதிவேடு, கணக்கு புத்தகங்கள், கோவில் நோட்டிசுகள் தாக்கல் செய்தேனா என்றால் சரிதான் தற்பொழுது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 நான் தாக்கல் செய்துள்ளதுதான் என்றால் சரிதான். அதில் தர்மகர்த்தவாக தங்கவேல் நைனார் பெயர் குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். தங்கவேல் தர்மகர்த்தாவாக இருந்ததால்தான் அவர் பெயர் குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். தங்கவேல் நைனாருக்கு என்னுடைய சகோதரர் ராமசாமி நைனார் ஒரு மகன் என்றால் சரிதான். அவர் 2018-ம்ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராமசாமி நைனாரின் மகன்தான் பிரதிவாதி கோடீஸ்வரன் என்றால் சரிதான். தர்மகர்த்தாவாக மூத்தமகன்தான் இருந்து வருவதாக வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல என்னுடைய தந்தை குப்புசாமி நைனார் என்றால் சரிதான். அவர் தர்மகர்த்தாவாக இருந்ததற்கு எந்தவிதமான நோட்டிசுகளோ ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் தர்ம கர்த்தாவாக இருந்து நடத்தியதற்கான கணக்கு வழக்கு நோட்டை சமர்ப்பித்துள்ளேன். மேற்படி கோயிலில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை திருவிழா நடைபெறும் என்றால் ஆண்டுக்கொருமுறை நடக்கும். ஒவ்வொரு ஆண்டும் நோட்டிசு அடிப்போம் என்றால் இல்லை. எப்போது நோட்டிஸ் அடிப்போம் என்றால் பாரத சொற்பொழிவு நடைபெறும்பொழுது அடிப்போம்.எங்கள் ஊரில் தற்பொழுது ஊர்கவுண்டர் ஜெயபால் என்றால் சரியல்ல. ஜெயபிரகாஷ் என்பவர்தான் ஊர் கவுண்டர். அவர் யாருடைய மகன் என்றால் அகரத்தை சேர்ந்த கோபால் கவுண்டரின் மகன். ஊர்கவுண்டர் ஜெயபால்தான் என்றும், வழக்கிற்காக நான் ஜெயபிரகாஷ் என்றும் மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஜெயபாலுக்கு முன்பு யார் ஊர்கவுண்டர் என்றால் கோபால் கவண்டர். ஜெயபிரகாஷ்தான் ஊர்கவுண்டர் அவருக்கு முன் கோபால் கவுண்டர். கோபால் கவுண்டர் ஊர்கவுண்டராக இருந்ததில்லை என்றும், வடிவேல் கவுண்டர்தான் ஊர்கவுண்டராக இருந்தார் என்றும், அவருக்கு பின்னிட்டுதான்

ஜெயபால்தான் ஊர்கவுண்டராக இருந்துவருகிறார் என்றால் சரியல்ல. கோபால் கவுண்டருக்கு முன்புதான் ஊர்கவுண்டராக இருந்தார். தற்பொழுது மந்திரி கவுண்டர் யார் என்றால் யாருமில்லை. மேற்படி கோயிலின் கும்பாபிஷேகம் 8.2.19 முதல் 11.2.19 வரை நடைபெற்றது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு 48 நாட்கள் மண்டல பூஜை செய்தார்கள் என்றால் வழக்கு போட்டதற்காக அவசரஅவசரமாக செய்தார்கள்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.